©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 9.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 10] சென்னை, புதன்கிழமை, மார்ச் 16, 2011
பங்குனி 2, திருவள்ளுவர் ஆண்டு–2042

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 36/2010.**

***2010–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து மேலும் குறிப்பிட்ட சில தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்திய குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்ட மன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு

**1.** இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டம் என வழங்கப்பெறும்.

2010–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும் நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து துணை நிதி ஒதுக்கம் செய்தல்.

**2.** மாநில அரசு, 2010–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுகிற மூன்றாயிரத்து அறுநூற்று ஏழு கோடியே இருப்பத்தாறு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரம் ரூபாய்க்கு மேற்படாத மேலுமானதொரு தொகையை–

(a) இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையால் வழங்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் *சாட்டப்பட்ட* துணைச் செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநில தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

**இணைப்புப் பட்டியல்**

(2–ஆம் பிரிவைக் காண்க.)

| | | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும். | | சட்ட மன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | *மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது.* | மொத்தம். |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | மாநில சட்டமன்றம் | வருவாய் | 29,48,000 | ... | 29,48,000 |
| | | மூலதனம் | ... | ... | |
| | | கடன் | ... | ... | |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | 1,000 | *2,000* | 3,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 3 | நீதி நிருவாகம் | வருவாய் | 2,58,82,000 | *8,81,000* | 2,67,63,000 |
| | | மூலதனம் | ... | ... | |
| | | கடன் | ... | ... | |
| 4 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 2,25,15,000 | ... | 2,25,15,000 |
| | | மூலதனம் | 4,79,49,000 | ... | 4,79,49,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 5 | வேளாண்மைத் துறை | வருவாய் | 71,89,59,000 | ... | 71,89,59,000 |
| | | மூலதனம் | 55,24,37,000 | ... | 55,24,37,000 |
| | | கடன் | 90,00,00,000 | ... | 90,00,00,000 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறை) | வருவாய் | 8,77,36,000 | ... | 8,77,36,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறை) | வருவாய் | 13,35,41,000 | ... | 13,35,41,000 |
| | | மூலதனம் | 11,00,000 | ... | 11,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 8 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | வருவாய் | 2,000 | ... | 2,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 6,000 | ... | 6,000 |
| | | மூலதனம் | 2,73,67,000 | ... | 2,73,67,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 47,24,000 | ... | 47,24,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 2,000 | .. | 2,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 98,42,000 | ... | 98,42,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | 39,65,000 | ... | 39,65,000 |

| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும். | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்ட மன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | *மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது.* | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 201,09,39,000 | ... | 201,09,39,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 500,00,00,000 | ... | 500,00,00,000 |
| 15 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | வருவாய் | 24,83,000 | ... | 24,83,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 16 | நிதித் துறை | வருவாய் | 26,76,000 | ... | 26,76,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 13,80,000 | ... | 13,80,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | வருவாய் | 70,10,93,000 | ... | 70,10,93,000 |
| | | மூலதனம் | 18,49,30,000 | ... | 18,49,30,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 20 | உயர் கல்வித் துறை | வருவாய் | 2,01,39,000 | ... | 2,01,39,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | வருவாய் | 9,00,00,000 | .. | 9,00,00,000 |
| | | மூலதனம் | 13,000 | *2,41,39,000* | 2,41,52,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 3,55,69,000 | ... | 3,55,69,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 13,64,59,000 | ... | 13,64,59,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 2,29,30,000 | ... | 2,29,30,000 |
| | | மூலதனம் | 2,77,71,000 | ... | 2,77,71,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 3,000 | ... | 3,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும். | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்ட மன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 26 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | வருவாய் | 406,51,48,000 | ... | 406,51,48,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | 49,45,00,000 | ... | 49,45,00,000 |
| 27 | தொழில் துறை | வருவாய் | 6,18,25,000 | ... | 6,18,25,000 |
| | | மூலதனம் | 2,10,00,000 | ... | 2,10,00,000 |
| | | கடன் | 6,18,34,000 | ... | 6,18,34,000 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 49,09,000 | ... | 49,09,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 29 | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | வருவாய் | 3,93,51,000 | ... | 3,93,51,000 |
| | | மூலதனம் | 5,35,00,000 | ... | 5,35,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | 1,15,00,000 | ... | 1,15,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | வருவாய் | 289,19,33,000 | ... | 289,19,33,000 |
| | | மூலதனம் | ... | ... | .. |
| | | கடன் | ... | ... | ... |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | வருவாய் | 52,68,92,000 | ... | 52,68,92,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 316,86,80,000 | ... | 316,86,80,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | வருவாய் | 78,10,000 | ... | 78,10,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 2,000 | ... | 2,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 38 | பொதுத் துறை | வருவாய் | 71,88,000 | ... | 71,88,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 39 | கட்டடங்கள் (பொதுப்பணித் துறை) | வருவாய் | 1,16,11,000 | *7,97,000* | 1,24,08,000 |
| | | மூலதனம் | 4,85,21,000 | ... | 4,85,21,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 40 | பாசனம் (பொதுப்பணித் துறை) | வருவாய் | 20,48,000 | ... | 20,48,000 |
| | | மூலதனம் | 13,35,10,000 | *35,13,000* | 13,70,23,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும். | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்ட மன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | *மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது.* | மொத்தம். |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 41 | வருவாய்த் துறை | வருவாய் | 209,90,44,000 | ... | 209,90,44,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | வருவாய் | 157,13,10,000 | ... | 157,13,10,000 |
| | | மூலதனம் | 468,78,02,000 | ... | 468,78,02,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | வருவாய் | 42,61,35,000 | ... | 42,61,35,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | 50,00,00,000 | ... | 50,00,00,000 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | வருவாய் | 59,51,000 | ... | 59,51,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | வருவாய் | 100,66,06,000 | ... | 100,66,06,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 122,91,54,000 | ... | 122,91,54,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 5,000 | ... | 5,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 48 | போக்குவரத்துத் துறை | வருவாய் | 20,00,00,000 | ... | 20,00,00,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 54,19,44,000 | .. | 54,19,44,000 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 3,37,20,000 | ... | 3,37,20,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 50 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | 6,68,00,000 | ... | 6,68,00,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு | வருவாய் | 22,82,00,000 | ... | 22,82,00,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும். | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்ட மன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | *மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது.* | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| | *பொதுக்கடன்—திருப்பிச் செலுத்துதல்* | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | *105,95,58,000* | 105,95,58,000 |
| | | வருவாய் | **2,168,41,52,000** | ***16,80,000*** | **2,168,58,32,000** |
| | **மொத்தம்** | மூலதனம் | **579,74,11,000** | ***2,76,52,000*** | **582,50,63,000** |
| | | கடன் | **750,22,43,000** | ***105,95,58,000*** | **856,18,01,000** |
| | **பெருமொத்தம்** | .. | **3,498,38,06,000** | ***108,88,90,000*** | **3,607,26,96,000** |

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 41/2010.**

**2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.—

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

(2) இது, 2010–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25–ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 20/2010.** 2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டத்தின் 2–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில் (b) எனும் கூறில் "2007–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளுக்கு முன்னதாக வரிக் கணிப்பு செய்யப்பட்டிருக்கிற" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக "2010–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1–ஆம் நாளுக்கு முன்னதாக 2006–2007 என்பதான வரிக் கணிப்பு ஆண்டு வரையில், வரிக் கணிப்பு செய்யப்பட்டிருக்கிற" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். **2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

3. முதன்மைச் சட்டத்தின் 4–ஆம் பிரிவில், "2007–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளுக்கு முன்னதாக, தொடர்புடைய சட்டத்தின்படி வரிக்கணிப்பானது செய்யப்பட்டுள்ள" என்று வருகின்ற சொற்றொடருக்கு பதிலாக "2010–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1–ஆம் நாளுக்கு முன்னதாக 2006–2007 என்பதான வரிக் கணிப்பு ஆண்டு வரையில், தொடர்புடைய சட்டத்தின்படி வரிக்கணிப்பானது செய்யப்பட்டுள்ள" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். **4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2010.** 4. (1) 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) திருத்த அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. **நீக்கமும் காப்பும்.**

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 42/2010**

**2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் வகைமுறையை ஒரு முன் தேதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையில் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (தனி வகைமுறை) சட்டம் என வழங்கப்பெறும்.

22/2010 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 2–ஆம் பிரிவானது 2007–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1–ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் எனல்.

2. (இதன் பின்பு இதில் 2010–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் 1–ஆம் பிரிவின், (2)–ஆம் உட்பிரிவிலும், 2010–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19–ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழ்*** சிறப்பிதழின் பகுதி II–2ஆம் பிரிவில், 1–ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட II(2)/CTR/527(b)/2010 எனும் எண்ணிட்ட வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் மாநில அரசின் அறிவிக்கையிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், 2010–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 2–ஆம் பிரிவானது 2007–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 22/2010.

நீக்கமும் காப்பும்.

3. (1) 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (தனி வகைமுறை) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/2010.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருகின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 43/2010**

***2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 16/2003.

4 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தின் 4–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவில்,—

(1) (a) எனும் கூறில், "2008 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி வாக்கில் ஐந்து விழுக்காட்டளவிற்கும் கீழாகக் குறைத்து வந்து 2010–2011 ஆம் ஆண்டு வாக்கில் வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்குவதோடு" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2002–2003 ஆம் நிதியாண்டில் தொடங்கி... 2011 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31–ஆம் தேதி வாக்கில் ஐந்து விழுக்காட்டளவிற்கு மேற்படாமல் குறைத்து வந்து 2011–2012 ஆம் ஆண்டு வாக்கில் வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்குவதோடு" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (b) எனும் கூறில், "2011–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31–ஆம் தேதி" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக "2012–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31–ஆம் தேதி" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 44/2010**

***சென்னைப் பெருநகர திட்டமிடல் பகுதிக்காக ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பை நிறுவுவதற்காகவும் அதனுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்காகவும் வகை செய்வதற்கானதொரு சட்டம்.***

சென்னைப் பெருநகர திட்டமிடல் பகுதியில் போக்குவரத்து அமைப்பைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் மேலாண்மை செய்வதில் உள்ளடங்கிய முகவாண்மைகள் அநேகம் இருப்பதாலும்;

மேலும், அத்தகைய முகவாண்மைகளுக்கிடையேயான செயற்பாட்டினை உரியவாறு ஒருங்கிணைத்து முறைப்படுத்துவது ஏற்கனவே இருக்கிற உள் கட்டமைப்பு வசதிகளையும் மேம்பாட்டிற்கான வளவசதிகளையும் பயன்படுத்தும் பொருட்டு தேவையாக இருப்பதாலும் ;

எனவே, தற்போது, மேற்சொன்ன நோக்கங்களுக்கான ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பை நிறுவுவது என மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

**1. (1)** இந்தச் சட்டம் 2010—ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, சென்னை பெருநகர திட்டமிடல் பகுதி முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இஃது, அரசு அறிவிக்கை வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** இச்சட்டத்தில் தறுவாய், வேறு பொருள் குறித்தாலன்றி,—

(a) 'அதிகார அமைப்பு' என்பது, 3—ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பு என்று பொருள்படும்.

(b) 'அரசு' என்பது, 'மாநில அரசு' என்று பொருள்படும்.

(c) 'வகுத்துரைக்கப்பட்ட' என்பது, 'விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட' என்று பொருள்படும்.

(d) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு ஆனால் பொருள் வரையறை செய்யப்படாத சொற்களும், சொற்றொடர்களும், 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்பு சட்டத்தில் அதற்கு குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருள்களையே கொண்டிருத்தல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 35/1972

சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பை நிறுவுதல்.

**3. (1)** சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பு என்ற பெயரால் ஓர் அதிகார அமைப்பு நிறுவப்படுதல் வேண்டும்.

(2) அந்த அதிகார அமைப்பு நிலையான வழியுரிமையையும், பொது இலச்சினையையும் கொண்டதொரு கூட்டுருமமாக இருக்கும். மற்றும் மேற்சொன்ன பெயரால், வழக்கிடுதலும், வழக்கிடப்படுதலும் வேண்டும்.

**4.** (1) அந்த அதிகார அமைப்பு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும், அவர்களாவர்,– அதிகார அமைப்பில் எவரெவர் அடங்கியிருப்பர் எனல்.

(a) போக்குவரத்துத் துறையைப் பொறுப்பில் கொண்ட அமைச்சர், அவர் பதவி வழித் தலைவராக இருப்பார்;

(b) அரசு தலைமைச் செயலர், அவர் பதவி வழித் துணைத் தலைவராக இருப்பார்;

(c) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர், பதவி வழித் துணைத் தலைவராக இருப்பார்;

(d) போக்குவரத்துத் துறையின் அரசுச் செயலர், பதவி வழி ;

(e) நிதித்துறையின் அரசுச் செயலர், பதவி வழி;

(f) வீட்டுவசதி மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் அரசுச் செயலர், பதவி வழி ;

(g) நெடுஞ்சாலைகள் துறையின் அரசுச் செயலர், பதவி வழி ;

(h) உள் துறையின் அரசுச் செயலர், பதவி வழி;

(i) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசுச் செயலர், பதவி வழி;

(j) சென்னை மாநகரத்தின் காவல் ஆணையர், பதவி வழி;

(k) சென்னை மாநகராட்சியின் ஆணையர், பதவி வழி;

(l) போக்குவரத்து ஆணையர், பதவி வழி;

(m) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் – செயலர், பதவி வழி;

(n) சென்னை தென்னக இரயில்வேயின் பொது மேலாளர், பதவி வழி;

(o) சென்னை தென்னக இரயில்வேயின், சென்னை கோட்டத்தின், கோட்ட இரயில்வே மேலாளர், பதவி வழி;

(p) சென்னைப் பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) மேலாண்மை இயக்குநர், பதவி வழி;

(q) சென்னையிலுள்ள சென்னை துரித இரயில் (Chennai Metro Rail Ltd.) மேலாண்மை இயக்குநர், பதவி வழி;

(r) அரசால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட போக்குவரவு மற்றும் அனுப்புதலில் சிறப்புடைய வல்லுநர் ஒருவர்.

(2) அந்த அதிகார அமைப்பு வகுத்துரைக்கப்படலாகும் நடைமுறைக்கும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கவும் மூன்றிற்கும் மேற்படாத கூடுதல் உறுப்பினர்களை இசைந்து தெரிவு செய்யலாம்.

(3) அதிகார அமைப்பின் தலைவர் வாராமை, நோய், அல்லது பிற காரணம் எதனாலும் பதவிப் பணிகளை ஆற்ற இயலாதிருக்கிற போது, இரண்டு உதவித் தலைவர்களில் முதுநிலையில் உள்ளவர், தலைவர் அவருடைய பதவிப் பணிகளை பொறுப்பேற்றுக் கொள்கிறவரை, தலைவரின் பதவிப் பணிகளை ஆற்றுதல் வேண்டும்.

அதிகார அமைப்பின் உறுப்பினர் நிலைக்கான தகுதிக்கேடு.

**5.** நபர் ஒருவர்:–

(a) அவர் மனச் சீர்கேடு உடையவராய் இருந்தால்,

(b) அவர் நொடிப்பு நிலையர் என நீதிமுறையில் தீர்மானிக்கப்படுவதற்காக விண்ணப்பம் செய்தவராக இருந்தால் அல்லது விடுவிப்பு பெறாத ஒரு நொடிப்பு நிலையராக இருந்தால்;

(c) ஒழுக்கக் கேட்டை உள்ளடக்கிய குற்றச் செயல் எதற்காகவும் சட்டம் எதன்படியும் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்க தண்டனை அளிக்கப் பெற்றிருந்து அந்தத் தண்டனை நீக்கம் செய்யப்படாமலிருந்து, அந்த தண்டனைக் காலம் முடிவடைந்த தேதியிலிருந்து ஐந்தாண்டு கால அளவு கழிந்து போகாமலிருந்தால்,

(d) வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய பிற தகுதிக் கேட்டிற்கு உள்ளாகி இருந்தால்,

அவர் அதிகார அமைப்பின் ஓர் உறுப்பினராகப் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது இசைந்து தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது அவ்வாறு உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியற்றவராவார்.

பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பணி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள்.

**6.** (1) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் மூன்றாண்டு காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் மேலுமானதொரு மூன்றாண்டுக் காலத்திற்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்கு உரிமைத்தகுதி உடையவராவர்;

***வரம்புரை:*** ஆனால் இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக ஓர் ஆண்டிற்குக் குறையாத ஒரு கால அளவிற்கு ஒரு தற்செயல் காலியிடத்தில் பெயர் குறித்து நியமிக்கப்பட்டதொரு உறுப்பினராகப் பதவி வகித்திருந்த நபர் ஒருவர், முழுக்கால அளவாகிய மூன்றாண்டு கால அளவிற்கு பதவி வகித்திருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர், அரசுக்கு முகவரியிட்டு தம் கைப்பட எழுதுவதன் வாயிலாக தமது பதவியினை விட்டு விலகலாம். ஆனால் அவர், அவருடைய பதவி விலகல் அரசினால் ஏற்கப்படுகிற வரையில் தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பணி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள், வகுத்துரைக்கப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

அதிகார அமைப்பின் உறுப்பினர் நிலையிலிருந்து அகற்றுதல்.

**7.** நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், பதவிக்குப் பொருத்தமற்றவராக இருக்கிறார்; அல்லது அவரை அகற்றுவதை விரைவுபடுத்தக் கூடியதாயிருக்கிற தவறான நடத்தை அல்லது அசட்டைக் குற்றத்தை செய்தவராய் இருக்கிறார் என்பதாக அரசுக்குத் தோன்றுமானால், அரசானது, அவ்வாறு நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினருக்கு, காரணம் காட்டுவதற்கு ஒரு நியாயமான வாய்ப்பினை அளித்த பின்பு, ஆணை வாயிலாக, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட, அல்லது இசைந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

தற்காலிகக் காலியிடத்தை நிரப்புதல்.

**8.** நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பதவியிடத்தில், இறப்பு, பதவி விலகல், அகற்றுதல் காரணமாக அல்லது பிறவாறு, தற்செயல் காலியிடம் ஒன்று ஏற்படுமாயின், அந்தக் காலியிடம் கூடிய விரைவில் அரசினால் நிரப்பப்படுதல் வேண்டும். மற்றும் அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர் அவர் எவருடைய இடத்தை நிரப்புகிறாரோ அவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக இருக்கக்கூடிய அந்த எஞ்சியுள்ள காலத்திற்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

அதிகார அமைப்பின் உறுப்பினர் – செயலர் மற்றும் பணியாளர்கள்.

**9.** (1) சென்னை பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பின் தலைமை நகர்ப்புற திட்டமிடுபவர் (போக்குவரத்து), அதிகார அமைப்பின் உறுப்பினர் – செயலராக இருப்பார்.

(2) அந்த அதிகார அமைப்பானது, அதன் அலுவல் பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்காக, அது தேவையெனக் கருதுகிற அத்தகைய எண்ணிக்கையில் அலுவலர்களையும், பணியாளர்களையும் அமர்த்தலாம்.

(3) அதிகார அமைப்பின் உறுப்பினர்–செயலர், அலுவலர்கள், பணியாளர்கள், ஆகியோரின் பதவிக்காலம் மற்றும் பணி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

**10.** (1) அதிகார அமைப்பானது, பெருமளவிலான பொதுப் பயணிகளுக்கான போக்குவரத்து அமைப்புகளை மேம்படுத்துவது, சென்னைப் பெருநகர திட்டமிடல் பகுதியில் சிறப்பு தன்மையதான குறிப்பிட்ட சில போக்குவரத்து உள் கட்டமைப்புகளை செயல்படுத்துவதோடு கூட, அவற்றின் செயல்பாடுகளை முறைப்படுத்துவது உள்ளடங்கலாக, பல்வேறுபட்ட போக்குவரத்து திட்டங்களைச் செயல்படுத்துவதைக் கண்காணித்தலும், ஒருங்கிணைத்தலும், மேம்படுத்துதலும், மேற்பார்வையிடுதலும் வேண்டும்.

அதிகார அமைப்பின் அலுவல் பணிகள்.

(2) இந்த அதிகார அமைப்பானது, போக்குவரத்துப் பகுதிகளில் ஒருங்கிணைக்கும் அதிகார அமைப்பாகச் செயல்படுதல் வேண்டும்.

(3) இந்த அதிகார அமைப்பானது, சென்னைப் பெருநகர திட்டமிடல் பகுதியில் போக்குவரத்தை பாதிக்கக் கூடிய பொருட்பாடுகளின் பேரில் முடிவுகளை எடுத்தல் வேண்டும். மற்றும் ஒருங்கிணைந்த போக்குவரத்து திட்டத்தின் ஒட்டு மொத்த திறமையிலிருந்து விலகிச் செல்கிறவாறு முகவாண்மைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகள் எதனாலும் நடவடிக்கைகள் எவையும் தொடங்கப்படாதிருப்பதை மேற்பார்வையிடுதலும் வேண்டும்.

(4) (1)–ஆம் பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, இந்த அதிகார அமைப்பானது,–

(1) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தை கலந்தாய்வு செய்து பெருந்திட்டத்தில் பெருமளவிலான பொதுப் பயணிகள் போக்குவரத்து முறைகள் மற்றும் தொடர்புடைய உள் கட்டமைப்பு அனைத்தையும் திட்டமிடுதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த போக்குவரத்து திட்டம் ஒன்றை தயாரித்து, அந்தந்த போக்குவரத்து முகவாண்மைகள் வாயிலாக அவை செயற்படுத்தப்படுவதற்கு பரிந்துரைத்தல் வேண்டும்.

(2) சென்னைப் பெருநகர திட்டமிடல் பகுதியில் போக்குவரத்து நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கிணங்க காலமுறையில் ஒருங்கிணைந்த போக்குவரத்து திட்டத்தைக் காலத்திற்கேற்றாற்போல் மாற்றியமைத்தல் வேண்டும்.

(3) ஒருங்கிணைந்த போக்குவரத்து திட்டத்தை கண்காணித்தலும் ஒருங்கிணைத்தலும் அது செயற்படுத்தப்படுவதை மதிப்பீடு செய்தலும் வேண்டும்.

(4) சிறப்பு தன்மையதான போக்குவரத்து உள் கட்டமைப்புகளை திட்டமிட்டு செயல்படுத்துதல் வேண்டும்.

(5) பொது மக்களுக்கு தடையற்ற போக்குவரத்து வசதியை அளிக்கும் பொருட்டு, தடங்களை குறித்தல் மற்றும் அவற்றை பட்டியலிடுதல், கூடுதல் கிளைத் தடங்களை இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த அல்லது பொதுச் சீட்டு முறைக்கு ஏற்பாடு செய்தல் உள்ளடங்கலான பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதன் வாயிலாக பெருமளவிலான பொதுப் பயணியர் போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் வேண்டும்.

(6) சென்னை பெருநகர திட்டமிடல் பகுதியில் பயணத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு ஒவ்வொரு பெருமளவிலான பொதுப் பயணியர் போக்குவரத்து முறைகளின் மற்றும் துணை போக்குவரத்து முறைகளின் சீர்மையையும் திறனையும் அதிகரிக்கும் பொருட்டு நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் வேண்டும்.

(7) தடங்களை கால முறை தோறும் ஆய்வு செய்வதன் வாயிலாக பெருமளவிலான பொதுப் பயணியர் போக்குவரத்து முறைகள் மற்றும் துணைப் போக்குவரத்து முறைகளுக்கான தடத்திற்கான திட்டத்தை முறைப்படுத்துதல் வேண்டும்.

(8) அரசின் ஏற்பளிப்புடன், பெருமளவிலான பொதுப் பயணியர் போக்குவரத்து முறைகள் மற்றும் துணைப் போக்குவரத்து முறைகளுக்கான கட்டணங்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

(9) புத்தாக்க முறைகளையும், செயல்முறைகளையும் ஏற்படுத்துதல் அவை குறித்து விவாதித்தல் மற்றும் கலந்தாய்வு செய்தல் வேண்டும். மற்றும் அத்தகைய முறைகளையும் செயல்முறைகளையும் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்குப் பரிந்துரை செய்தல் வேண்டும்.

(10) பெருமளவிலான பொதுப் பயணியர் போக்குவரத்து முறைகளின் மற்றும் துணைப் போக்குவரத்து முறைகளின் செயற்பாட்டினை அல்லது திறனை மேம்படுத்துவதற்கு தேவையான படிப்புகளையும் ஆய்வுகளையும் தொடங்குதல் வேண்டும். மற்றும் தரவுத்தளம் ஒன்றை பேணி வருதலும் வேண்டும்.

(11) போக்குவரத்து அமைப்பை மேம்படுத்துவதற்காக தேவைப்படுகிற விடத்தெல்லாம், இரயில்வேக்கள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் பொறுத்து, மைய அரசுக்குப் பரிந்துரைகள் செய்தல் வேண்டும்.

(12) கட்டமைப்புத் தர நிலைகள், பேணுகை மற்றும் பல்வேறு குடிமை முகவாண்மைகளால் பிந்தைய சாலைப் பாதுகாப்பு தணிக்கை உள்ளடங்கலாக, விபத்து நிகழ்வுகளைக் குறைப்பதற்கு உதவிசெய்கிற மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிற பொருட்பாடுகள் குறித்த நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் வேண்டும்.

(13) சாலை பாதுகாப்பு குழு ஒன்றை மேலாண்மை செய்து வருதல் வேண்டும்.

(14) முகவாண்மைகளுக்கு இடையேயான வேண்டுகோள்கள் இணக்கமாய் தீர்க்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும். மற்றும் அந்த முகவாண்மைகளுக்கு இடையே ஏற்படக் கூடிய வேறுபாடுகளைத் தீர்த்தல் வேண்டும்.

(15) ஒருங்கிணைந்த போக்குவரத்து திட்டத்திற்குள் அடங்காத ஆனால் பெருமளவிலான பொதுப் பயணியர் போக்குவரத்து முறைகள் தொடர்பான தொடர் முகவாண்மைகளின் பிற செயற்படு திட்டம் எதனையும் மற்றும் தொடர்புடைய உள் கட்டமைப்பினையும் சென்னை பெருநகர் திட்டமிடல் பகுதியில் ஒன்று சேர்த்து ஒருங்கிணைப்பதற்கான மற்றும் அவற்றை செயல்படுத்துவதை எளிதாக்குவதற்கான நடவடிக்கைகளை முறைப்படுத்துதல்.

(16) ஒருங்கிணைந்த போக்குவரத்து திட்டத்தை செயல்படுத்துவதற்காக தொடர் முகவாண்மைகளுக்கு நிதியங்களை குறித்தளிப்பதற்காக ஆண்டு வரவு செலவு திட்டங்களைத் தயாரித்து அரசுக்கு அவற்றை பரிந்துரை செய்து அனுப்புதல் வேண்டும்.

(17) பெருமளவிலான பொதுப் பயணியர் போக்குவரத்து அமைப்பை திட்டமிடுதல் குறித்து அரசால் அதனிடம் ஒப்படைக்கப்படலாகும் பிற அலுவல் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

இணங்கி நடப்பதில் இருந்து விதிவிலக்கு.

**11.** அரசானது அது பொருத்தமென கொள்ளலாகும் நிபந்தனைகளுக்குட்பட்டு, பொது அல்லது தனி ஆணை வாயிலாக அதிகார அமைப்பின் பரிந்துரைகளில் எவற்றிற்கும் இணங்கி நடப்பதிலிருந்து போக்குவரத்து முகவாண்மை எதற்கும் விலக்களிக்கலாம்.

அதிகார அமைப்பின் கூட்டங்கள்.

**12.** அதிகார அமைப்பானது தேவையாகிறவிடத்தெல்லாம் கூடுதல் வேண்டும். மற்றும் ஒழுங்கு முறை விதிகளில் வகுத்துரைக்கப்படலாகும் நடைமுறை விதிகளைப் பின்பற்றுதல் வேண்டும்:

***வரம்புரை:***

ஆனால் அதிகார அமைப்பானது, மூன்று மாதங்களில் குறைந்தது ஒரு முறையாவது கூடுதல் வேண்டும்.

அதிகார அமைப்பின் நடவடிக்கைகள்.

**13.** (1) அதிகார அமைப்பானது, அதிகார அமைப்பின் கூட்டங்களுக்கான நேரம் மற்றும் இடங்கள், அந்த கூட்டங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறை, அதிகார அமைப்பின் கூட்டங்களில் அலுவல் நடத்தும் முறை தொடர்பான பொருட்பாடுகளை உள்ளடக்கலாகிற அதன் நடவடிக்கைகளை நடத்துவதற்கான மற்றும் அதன் அலுவல் பணிகளை ஆற்றுவதற்கான ஒழுங்கு முறை விதிகளை உருவாக்குவதற்கு அதிகாரம் உடையதாகும்.

(2) அதிகார அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு இருக்கிற நேர்வில், பெரும்பான்மையினரின் கருத்தே மேலோங்கி நிற்கும்; மற்றும் அதிகார அமைப்பின் கருத்து பெரும்பான்மையினரின் கருத்துக்களாகவே வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) அதிகார அமைப்பின் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பானது, அதிகார அமைப்பின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்காயிருத்தல் வேண்டும்.

***வரம்புரை:***

ஆனால் நெருக்கடி நேர்வுகளில், அதிகார அமைப்பானது, பொருட்பாடு எதனையும், உறுப்பினர்களுக்குச் சுற்றனுப்புவதன் வாயிலாகத் தீர்மானிக்கலாம்.

(4) அதிகார அமைப்பின் தலைவர், தலைவர் பணிக்கலாகும் நேரத்திலும் இடத்திலும் கூடுமாறு அதிகார அமைப்பின் கூட்டம் ஒன்றிற்கு அழைப்பு விடுக்குமாறு உறுப்பினர்– செயலரை அறிவுறுத்தலாம்.

(5) அதிகார அமைப்பின் முடிவுகள் பணிப்புரைகள் மற்றும் பரிந்துரைகள் அனைத்தும் எழுத்து வடிவில் இருத்தல் வேண்டும்.

**14.** அதிகார அமைப்பானது, பொது அல்லது தனி ஆணை வாயிலாக, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் நிபந்தனைகளுக்குட்பட்டு, தேவையெனக் கருதலாகும் தன்னுடைய அதிகாரங்கள் மற்றும் அலுவற் பணிகளில் எதனையும், அதிகார அமைப்பின் உறுப்பினர் அல்லது அலுவலர் எவரிடமும் ஒப்படைவு செய்யலாம். ஒப்படைவு செய்தல்.

**15.** அதிகார அமைப்பானது, அதிகார அமைப்பால் வகுத்துரைக்கப்படக்கூடிய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் அதனுடைய அலுவற் பணிகளை ஆற்றுகையில், அதிகார அமைப்புக்கு உதவுவதற்குத் தேவைப்படுகிற ஆலோசகர்களை அவ்வப்போது நியமிப்பதற்கு உரிமையுடையதாகும். அதிகார அமைப்பின் ஆலோசகர் களை நியமித்தல்.

**16.** அதிகார அமைப்பானது, அடுத்த நிதியாண்டினைப் பொறுத்து, மதிப்பீடு செய்யப்பட்ட வரவையும், செலவினத்தையும் காட்டுகிற வரவு செலவு திட்டம் ஒன்றை, வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும், நேரத்திலும் தயாரித்தல் வேண்டும்; மற்றும் அந்த வரவு செலவுத் திட்டத்தின் படியொன்றும் அரசுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அதிகார அமைப்பின் வரவு செலவு திட்டம்.

**17.** (1) அதிகார அமைப்பானது தனது சொந்த நிதியத்தைக் கொண்டிருக்கும்; மற்றும் அவ்வப்போது அதற்கு அரசால் செலுத்தப்படலாகும் தொகைகள் அனைத்தும் மற்றும் அதிகார அமைப்பின் வரவுகள் அனைத்தும் அந்த நிதியத்தில் வரவு வைக்கப்பட வேண்டும். அதிகார அமைப்பின் நிதியங்கள்.

(2) அரசானது, ஒவ்வொரு நிதியாண்டிலும், அதிகார அமைப்பில் செயல்படுவதற்காக தேவையெனக் கருதப்படக்கூடிய தொகைகளை அதிகார அமைப்பிற்கு வழங்கலாம்.

(3) இந்த சட்டத்தின்படி அல்லது இந்த சட்டத்தின் நோக்கங்களுக்காக அதிகார அமைப்பால் செய்ய நேர்ந்த செலவுகள் அனைத்தும் மேற்சொன்ன நிதியத்திலிருந்து செலவு செய்யப்படுதல் வேண்டும். மற்றும் அந்த செலவுகள் செய்யப்பட்ட பிறகு, எஞ்சியுள்ள உபரித் தொகை எதுவும், வகுத்துரைக்கப்படலாகும் முறையில் வைப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

**18.** (1) அதிகார அமைப்பின் கணக்குகள் வகுத்துரைக்கப்படக்கூடிய முறையிலும் படிவத்திலும் வைத்து வரப்படுதல் வேண்டும். அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படக்கூடிய படிவத்தில் ஆண்டுக் கணக்குகளின் விவர உரை ஒன்றை தயாரித்தல் வேண்டும். ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை.

(2) அதிகார அமைப்பின் கணக்குகள், இதன் பொருட்டு அரசு நியமிக்கலாகும் தணிக்கையரால் ஓராண்டில் குறைந்தது ஒருமுறையாவது தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) (2)–ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட தணிக்கையர், தணிக்கை நோக்கங்களுக்காக, வகுத்துரைக்கப்படலாகும் உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் அதிகாரம் ஆகியவற்றைப் பெற்றிருப்பார்.

(4) உறுப்பினர்–செயலர், தணிக்கை அறிக்கையை அச்சிடுவதற்கு ஆவன செய்தல் வேண்டும். மற்றும் அதன் அச்சடிக்கப்பட்ட படி ஒன்றை ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்புதல் வேண்டும். மற்றும் அதன் அடுத்த கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படுவதற்காக அந்த அறிக்கையை அதிகார அமைப்பின் முன் வைத்தல் வேண்டும்.

(5) அதிகார அமைப்பானது, தணிக்கை அறிக்கையில் சுட்டப்படலாகும் குறைபாடு அல்லது முறைகேடு எதனையும் உடனடியாகத் தீர்ப்பதற்காக உரிய நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.

(6) தணிக்கையரால் உறுதி சான்றிடப்பட்ட அதிகார அமைப்பின் கணக்குகள், அதன் பேரிலான அதிகார அமைப்பின் குறிப்புரைகளுடன் கூட தணிக்கை அறிக்கையும் சேர்த்து, வகுத்துரைக்கப்படக்கூடிய கால அளவிற்குள்ளாக அரசுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(7) அரசானது, ஆணை வாயிலாக, அந்த தணிக்கை அறிக்கையில் வெளியிடப்பட்ட குறைபாடுகள், எவையேனும் இருப்பின், அவற்றை தீர்வு செய்வதற்காக, அதில் குறித்துரைக்கப்படக்கூடிய கால அளவிற்குள், அந்த ஆணையில் குறித்துரைக்கப்படக்கூடிய நடவடிக்கையை எடுக்குமாறு அதிகார அமைப்பினைப் பணிக்கலாம். மற்றும் அந்த அதிகார அமைப்பு, அந்த பணிப்புரைக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

*ஆண்டறிக்கை.*

**19.** அதிகார அமைப்பானது, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதிக்குப் பிறகு, கூடிய விரைவில் முந்தைய நிதியாண்டின் போதான தன்னுடைய நடவடிக்கைகள் குறித்து, விவரங்களை அளிக்கிற அறிக்கை ஒன்றை வகுத்துரைக்கப்படலாகும் தேதிக்கு முன்பு, வகுத்துரைக்கப்படலாகும் படிவத்தில் தயாரித்து அரசுக்கு பணிந்தனுப்புதல் வேண்டும். மற்றும் அந்த அறிக்கையானது அடுத்த நிதியாண்டின் போது அதிகார அமைப்பால் பெரும்பாலும் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் எவையேனும் இருப்பின் அவை குறித்த விவரங்களை அளித்தல் வேண்டும். மற்றும் அரசானது, அதனைப் பெற்ற பிறகு கூடிய விரைவில், அத்தகைய அறிக்கை ஒவ்வொன்றும் சட்டப் பேரவையின் முன்பு வைக்கப்படுவதற்கு ஆவன செய்தல் வேண்டும். அந்த ஆண்டறிக்கையின் படியொன்று சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்குக் கூட அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

*பணிப்புரைகளை பிறப்பிப் பதற்கான அதிகாரம்.*

**20.** அரசானது, இந்த சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, தன்னுடைய கருத்துப்படி தேவையான அல்லது உகந்ததான பணிப்புரைகளை பிறப்பிக்கலாம்; மற்றும் அந்த அதிகார அமைப்பு, அத்தகைய பணிப்புரைகள் அனைத்திற்கும் செயல்வடிவம் கொடுத்தல் வேண்டும்.

*அதிகார அமைப்பின் நடவடிக்கைகள் இயலாமையின் காரணமாக செல்லத் தகாததாக ஆகாது.*

**21.** அதிகார அமைப்பானது, உறுப்பினர் நிலையில் காலியிடம் எதுவும் அல்லது அதன் அமைப்பில் குறைபாடு எதுவும் இருந்த போதிலும் செயற்படுவதற்கு அதிகாரம் உடையதாக இருக்கும். மற்றும் அதிகார அமைப்பின் நடவடிக்கைகள், உறுப்பினராக இருப்பதற்கு உரிமையில்லாத எந்த நபரும் அதிகார அமைப்பின் நடவடிக்கைகளில் வந்திருந்தார், வாக்களித்தார் அல்லது பிறவாறு பங்கேற்றுக் கொண்டார் என்ற போதிலும் செல்லும் தன்மையதாகும்.

*அதிகார அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் பொது ஊழியர்களாக இருத்தல்.*

**22.** அதிகார அமைப்பின் தலைவர், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள் உறுப்பினர்–செயலர் மற்றும் பிற அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த சட்டத்தின் அல்லது இந்த சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஒழுங்கு முறை விதி அல்லது ஆணை அல்லது பணிப்புரை எதனின் வகைமுறைகளில் எதனையும் ஒட்டி செயற்படுகிறபோது அல்லது செயற்படுவதாக புலப்படுகிறபோது, இந்திய தண்டனை தொகுப்புச் சட்டத்தின் 21–ஆம் பிரிவின் பொருளின்படி பொது ஊழியர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*மையச் சட்டம் XLV/1860.*

*நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பாதுகாப்பு.*

**23.** இந்த சட்டத்தினை அல்லது இந்த சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, ஆணை அல்லது பணிப்புரை எதனையும் ஒட்டி, நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனையும் பொறுத்து, அரசுக்கு அதிகார அமைப்புக்கு அல்லது அதன் உறுப்பினர்

எவருக்கும் அல்லது அரசின் அல்லது அதிகார அமைப்பின் பணிப்புரையின்கீழ் செயற்படுகிற அலுவலர் அல்லது பணியாளர் அல்லது நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு எதுவும் அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எவையும் தொடரப்படுதல் ஆகாது.

**24.** (1) அதிகார அமைப்பானது, இந்த சட்டத்தின்படி, தன் அலுவற் பணிகளை நிறைவேற்றுவதற்காக, இந்த சட்டத்திற்கு அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளுக்கு இணங்கியவையாகவுள்ள ஒழுங்குமுறை விதிகளை அரசின் முன் ஒப்பளிப்புடன் செய்யலாம்.

ஒழுங்குமுறை விதிகளைச் செய்வதற்கு அதிகார அமைப்புக்குள்ள அதிகாரங்கள்.

(2) ஒழுங்கு முறை விதி அல்லது அதன் நீக்கம் அல்லது மாற்றம் எதுவும், அவை, அரசினால் ஏற்பளிக்கப்படும் வரையில் செயல்வடிவம் கொள்ளுதல் கூடாது.

(3) அரசானது, அறிவிக்கை வாயிலாக, இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதி எதனையும் நீக்கஞ் செய்யலாம். மற்றும் அதன் பேரில், அந்த ஒழுங்குமுறைவிதி செயல்வடிவம் பெற்றிருப்பது அற்றுப் போகும்.

**25.** (1) அரசு, இந்த சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, விதிகளைச் செய்யலாம்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(2) இந்த சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும் அல்லது 26–ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், சட்டப் பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத் தொடர் அல்லது அடுத்த கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு அந்தப் பேரவை அத்தகைய விதி அல்லது ஆணை எதிலும் மாற்றம் எதனையும் செய்யுமானால் அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது அல்லது ஆணை பிறப்பிக்கப்படுதல் ஆகாது எனப் பேரவை முடிவு செய்யுமானால், அதன் பின்பு, அந்த விதி அல்லது ஆணை அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட படிவத்தில் மட்டுமே செயல்வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது, நேர்வுக்கேற்ப செயல்வடிவம் பெறாது போகும். எனினும், அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

**26.** இந்த சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல்வடிவம் அளிப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால், அரசானது, இந்த சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத ஆணை வாயிலாக, அந்த இடர்ப்பாட்டினை நீக்கம் செய்கிற நோக்கத்திற்காகத் தேவையானதென அல்லது உகந்ததென தோன்றுகிற எதனையும் செய்யலாம்:

இடர்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

***வரம்புரை:*** ஆனால் அத்தகைய ஆணை எதுவும் இந்த சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதல் ஆகாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010—ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 45/2010.**

***சென்னைப் பெருநகரத் திட்டப் பரப்பிடத்திற்கு ஓராண்டுக் கால அளவிற்குத் தனி வகைமுறைகளைச் செய்வதற்கும், அதனோடு தொடர்புடைய அல்லது அவற்றுக்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்குமானதொரு சட்டம்.***

தற்போது நடைமுறையில் உள்ள சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்கான முதல் பெரும் திட்டம், அதில் அடங்கியுள்ள மேம்பாட்டு கட்டுப்பாடு விதிகள் மற்றும் கட்டட விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் துணைமுறை விதிகள் ஆகியவற்றுக்கு இணங்கிய வகையில் அல்லாமல், அதிகாரமளிக்கப்படாத கட்டமைப்பு வளர்ச்சிகளுக்கு வழி கோலுகிற வகையில் சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தில் உள்ள நிலம் மற்றும் கட்டமைப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிற வகையில், தொழில்மயமாக்கல், மக்கள் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் குடிபெயர்தல் மற்றும் பல்வேறு பிற காரணங்களால் மக்கள் தொகையில் அதிவேகமான வளர்ச்சி ஏற்பட்டுவிட்டதாலும்;

மேலும், மேம்பாட்டுக்கான அனைத்துக் கூறுகளையும் ஆய்ந்து பார்க்குமாறும், 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டத்திற்கு (தமிழ்நாடு சட்டம் 35/1972) தேவையான மாறுதல்களைச் செய்வதற்கு ஆலோசனை வழங்குமாறும் ஓய்வுபெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் குழு ஒன்றை அரசானது அமைத்துருவாக்கியுள்ளதாலும்;

மேலும், மேற்சொன்ன குழுவின் பரிந்துரைகளானவை, 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டத்திற்குப் (தமிழ்நாடு சட்டம் 35/1972) பெருமளவிலான திருத்தங்களை உள்ளடக்கக் கூடும் என்பதோடு, அவற்றுள் சிலவற்றுக்கு, அதிலும் குறிப்பாக மேற்சொன்ன சட்டத்தின்படி தற்போதுள்ளவாறான முறையை மாற்றுகிற வகையில் வளாகங்களைக் கட்டுதல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பான வகைமுறைகளுக்கு, முன்தேதியிட்டு செயல்விளைவு கொடுக்க வேண்டியிருக்கும், என்பதாலும்;

மேலும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமமானது சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்கு, 2026—ஆம் ஆண்டினைத் தொலைநோக்கு எல்லை ஆண்டாகக் கொண்டு நகர்ப்புற வளர்ச்சியில் எழுகிற புதிய பரிமாணங்களைக் கருத்தில்கொண்டு II-ஆம் பெரும் திட்டத்தின் வரைவு ஒன்றினைத் தயாரித்து 31—08—2007 வரையிலான கால அளவினைக் கொடுத்து, பொதுமக்களிடமிருந்து மறுப்புரைகள் அல்லது ஆலோசனைகளைப் பெறுவதற்காக அது வெளியிடப்பட்டுள்ளது. II-ஆம் பெரும் திட்டத்தின் வரைவானது மக்களுடனான கலந்தாய்விற்குப் பின்னரும் அரசினால் ஆலோசனை வழங்கப்பட்டவாறான மாற்றங்களைச் செய்த பின்னரும், 2008—ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29—ஆம் நாளன்று அரசுக்கு மறுபடியும் பணிந்தனுப்பப்பட்டது; அரசானது, மேற்சொன்ன 2026—ஆம் ஆண்டுக்கான சென்னைப் பெருநகர் திட்டப் பரப்பிடத்திற்கான II-ஆம் பெரும் திட்டவரைவிற்கு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது; மற்றும் அது 2008—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2—ஆம் தேதியிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பிதழில் வெளியிடப்பட்டது. 2026—ஆம் ஆண்டுக்கான சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்கென ஏற்பளிக்கப்பட்ட II—ஆம் பெரும் திட்டத்தினால் ஏற்படக்கூடிய பல்வேறு விளைவுகள், இதற்கென உருவாக்கப்பட்ட ஆறு பகுதிக் குழுக்களின் பரிசீலனையில் உள்ளன என்பதாலும்;

மேலும், சென்னைப் பெருநகரப்பரப்பிடத்தில் குடிசைப் பகுதிகளை மேம்பாடு செய்வதற்காகவும், தேவைப்படும்போதெல்லாம் குடிசைப் பகுதியில் உள்ள மக்களை மறு குடியமர்வு செய்வதற்கு விரிவானதொரு கொள்கையினை உருவாக்க மாநில அரசானது கருதியுள்ளதாலும்;

பொதுத் தெருக்களில் விற்பனை செய்பவர்களின் செயற்பாட்டையும் மற்றும் கூவி விற்பவர்களின் செயற்பாட்டையும் ஒழுங்குபடுத்துவதற்கான செயல்திட்டம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் அவர்களால் செய்யப்படும் அதிகாரமற்ற கையுடைமை தொடர்பான பிரச்சனைகள் குறித்து விரிவானதொரு ஆய்வினைச் செய்யக் கருதப்பட்டுள்ளதாலும்;

மேலும், தற்போது நடைமுறையிலுள்ள சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்கான முதலாம் பெரும் திட்டத்தின் மற்றும் அதில் அடங்கியுள்ள மேம்பாட்டு கட்டுப்பாடு விதிகளின் வகைமுறைகளை மீறுவதற்கான நடவடிக்கையை, அரசினால் இந்த பொருட்பாடு குறித்து இறுதியான கருத்து எய்தப்படுவதற்கு முன்பாக, எடுப்பதானது சிறிய வணிகர்கள் உள்ளடங்கலான பெருமளவிலான மக்களுக்குத் தவிர்க்க இயலாத துன்பத்தையும் சரி செய்ய இயலாத இழப்பினையும் ஏற்படுத்தக் கூடும் என்பதாலும்;

மேலும், 2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டத்திற்குப் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2007) பதிலாக அமைக்கப்பட்ட 2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமானது, (தமிழ்நாடு சட்டம் 39/2007) சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்பு எதிர்க்கப்பட்டது; மற்றும் அது சென்னை உயர்நீதிமன்றத்தின் ஈராயம் ஒன்றினால் செல்லுபடியாகாதென நீக்கப்பட்டதாலும்;

மேலும், மேற்சொன்ன தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2007, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 39/2007 ஆகியவற்றைச் செல்லுபடியாகாதென நீக்கம் செய்த, சென்னை உயர்நீதிமன்றத்தின் மேற்சொன்ன தீர்ப்பிற்கு எதிராக, இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட தனி அனுமதி மனுக்களில் உச்ச நீதிமன்றமானது, மேலும் ஆணைகள் பிறப்பிக்கப்படுவது வரையிலும், 2007–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14–ஆம் நாளன்று இருந்தபடியான நிலையானது பேணி வரப்படுதல் வேண்டும் எனவும் மனுதாரர்கள் அதற்கு இடையில் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான ஆணை எதனையும் பிறப்பித்தல் கூடாது எனவும் ஆணையிட்டுள்ளதாலும்;

மேலும், மேற்சொன்ன 39/2007 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் செல்லும் தன்மை குறித்த வழக்கானது இந்திய உச்ச நீதிமன்றத்தின் நிலுவையில் இருந்து வருவதாலும்; மேற்சொன்ன 39/2007–எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டமானது 2008–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26–ஆம் நாளன்று செயல் விளைவுகொள்வது அற்றுப்போய்விட்டது என்பதாலும்; இந்திய உச்ச நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டுள்ளவாறு, உள்ளவாறான நிலையைப் பேணிவரும் பொருட்டு, அரசானது 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 56/2008) அரசு இயற்றியுள்ளது; அது 2009–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26–ஆம் நாளன்று செயல்விளைவு கொள்வது அற்றுப்போயிற்று என்பதாலும்; மற்றும் அதற்குப் பின்னர் இயற்றப்பட்ட சட்டமான, 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமும் (தமிழ்நாடு சட்டம் 7/2010) 2010–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாளன்று செயல்விளைவு கொள்வது அற்றுப்போயிற்று என்பதாலும்;

மேலும், பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து இயக்கத்திற்கான தேவைப்பாடுகளை விட்டுக்கொடுக்காமல் நீதிமன்றத் தீர்ப்புகளின் உயிர்ப்புத் தன்மையையும் அவற்றின் வாசகங்களையும் கருத்திற்கொண்டும் சரிசமமான நிலையிலும் நேரிய நிலையிலும் அமைந்த சிறிய அல்லது பெரிய இயல்பினதான மீறுகைகளைப் பொறுத்த அளவில் வகைமுறைகளைச் செய்வது தேவையானதாக இருப்பதாலும்;

மேலும், பாதுகாப்பு நடவடிக்கை ஒன்றை முழுவதுமாக உருவாக்க வணிக மற்றும் கடைகளைக் கொண்ட மையங்களில் முன்னெச்சரிக்கையாகத் தீயணைப்புப் பாதுகாப்பிற்கான நவீன தேவைப்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய, திட்டமிடும் அதிகார அமைப்பிற்குத் தக்கவாறு அதிகாரம் அளிப்பதற்கு வகைமுறைகளைச் செய்யவேண்டியிருப்பதாலும்;

மேலும், ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் அமைந்த குழுவானது, இதற்கிடையே தமது அறிக்கையினைப் பணிந்தனுப்பியிருப்பதாலும் மேற்சொன்ன அறிக்கையைப் பரிசீலனை செய்வதற்கு அரசுக்கு மேலும் காலம் தேவைப்படும் என்பதாலும் மற்றும் அதிகாரமளிக்கப்படாத கட்டடங்களுக்கு எதிராகச் செயல்முறை நடவடிக்கை எடுப்பதைத் தள்ளிவைக்கவேண்டியது உடனடித் தேவையாகியிருப்பதாலும்;

மேலும், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகை முறைகள்) சட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் தற்போது பயனுள்ள வகையில் இல்லாததாலும், 2011–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26–ஆம் நாள் வரையிலான கால அளவிற்குள்ளாக மேலும் குறிப்பிடப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் முடிவு செய்யவேண்டியிருப்பதாலும், அந்தக் கால அளவிற்கு அவ்வாறான நடவடிக்கைக்கு எதிராக சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திலுள்ள மக்களுக்குத் தற்காலிக நிவாரணம் வழங்குவதற்குச் சட்டம் ஒன்றை இயற்றுவது உகந்ததாயிருப்பதாலும்;

மேலும், சிறிய வணிகர்கள் உள்ளடங்கலான பெருமளவிலான மக்களுக்குத் தற்காலிக நிவாரணம் வழங்குவதற்கும் அவர்களுக்கு ஏற்படக்கூடிய தவிர்க்க இயலாத துன்பத்தையும் சரி செய்ய இயலாத இழப்பினையும் குறைப்பதற்கும் ஓர் ஆண்டுக் கால அளவு ஒன்றுக்குச் சட்டம் ஒன்றை இயற்றுவது உகந்ததாக இருப்பதாலும்;

**இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—**

**1.** (1) இந்தச் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) எண் 2 சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தை அளாவி நிற்கும்.

(3) இது, 2010–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) இது, இதன் தொடக்கத் தேதியிலிருந்து ஓர் ஆண்டு முடிவடைவதன் பேரில் செயல்விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும் அவ்வாறு அற்றுப்போவதற்கு முன்பாக செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விடப்பட்ட செயற்பாடுகளைப் பொறுத்த வரையில் அல்லாமல் அற்றுப்போதல் வேண்டும். மற்றும் அவ்வாறு அற்றுப்போவதன் பேரில், இந்தச் சட்டமானது தமிழ்நாடு சட்டம் ஒன்றினால் நீக்கம் செய்யப்பட்டிருந்தாற்போன்றே, 1891—ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுக் கூறுகள் சட்டத்தின் 8—ஆம் பிரிவானது பொருந்துதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 1/1891.

பொருள் வரையறைகள். **2.** (1) இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி.—

(*a*) ''கட்டட விதிகள், ஒழுங்குமுறை விதிகள், துணைமுறை விதிகள்'' என்றால் கட்டடங்கள் தொடர்பாக நேர்விற்கேற்ப 1919—ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ஆகியவற்றின்கீழ் செய்யப்பட்ட விதிகள், ஒழுங்குமுறை விதிகள், துணைமுறை விதிகள் ஆகியன எனப்பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் IV/1919. தமிழ்நாடு சட்டம் V/1920. தமிழ்நாடு சட்டம் 21/1994.

(*b*) ''சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடம்'' என்றால், 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டத்தின் 2—ஆம் பிரிவின் (23—a) எனும் கூறின்கீழ் குறித்துரைக்கப்பட்ட சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடம் எனப் பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*c*) ''விரிவான மேம்பாட்டுத் திட்டம்'' என்றால், சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தின்கீழ் உள்ளடங்குகிற பரப்பிடம் எதனையும் பொறுத்த அளவில் 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் ஏற்பளிக்கப்பட்ட விரிவான மேம்பாட்டுத் திட்டம் ஒன்று எனப்பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*d*) ''மேம்பாட்டு கட்டுப்பாட்டு விதிகள்'' என்றால், சென்னைப் பெருநகரப் பரப்பிடத்திற்கான மேம்பாட்டு கட்டுப்பாட்டு விதிகள் எனப்பொருள்படும்;

(*e*) ''அரசு'' என்றால் மாநில அரசு எனப்பொருள்படும்;

(*f*) ''உள்ளாட்சி அதிகார அமைப்பு'' என்றால், தமது அதிகார வரம்புகளின்கீழ் உள்ள பரப்பிடங்களைப் பொறுத்த அளவில் சட்டப்படியான கட்டுப்பாட்டினைச் செலுத்துவதற்கு உரிமைத் தகுதியுள்ளவாறு, 1919—ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சென்னை மாநகராட்சி அல்லது 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட (சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்குள்ளாக அமைந்த) நகராட்சிகள் அல்லது பேரூராட்சிகள் அல்லது 1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட (சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்குள்ளாக அமைந்த) ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது சிற்றூராட்சிகள் அல்லது 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் எனப் பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் IV/1919. தமிழ்நாடு சட்டம் V/1920. தமிழ்நாடு சட்டம் 21/1994. தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*g*) ''பெரும் திட்டம்'' என்றால் 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட சென்னைப் பெருநகர திட்டக் குழுமத்திற்கான பெரும் திட்டம் எனப் பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*h*) ''பொதுத் தெரு'' என்றால், 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டத்தின் 2—ஆம் பிரிவின் (37)—ஆம் கூறில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான பொதுத் தெரு எனப் பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் 35/1972.

*(i)* ''தண்டனை நடவடிக்கை'' என்றால், நீதிமன்ற ஆணைகளைத் தொடர்ந்து அல்லது பிறவாறு செய்யப்படும் கட்டட இடிப்பு உள்ளடங்கலாக அதிகாரமற்ற மேம்பாட்டுக்கு எதிராக, தொடர்புள்ள சட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்குள்ளாக உள்ளாட்சி அதிகார அமைப்பினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை எனப் பொருள்படும்;

*(j)* தொடர்பான சட்டம் என்றால்—

(i) சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நேர்வில், 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டம் எனவும்; தமிழ்நாடு சட்டம் 35/1972.

(ii) சென்னை மாநகராட்சியின் நேர்வில் 1919—ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் எனவும்; தமிழ்நாடு சட்டம் IV/1919.

(iii) நகராட்சிகளையும் பேரூராட்சிகளையும் பொறுத்த நேர்வில், 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் எனவும்; தமிழ்நாடு சட்டம் V/1920.

(iv) ஊராட்சி ஒன்றியங்களையும், சிற்றூராட்சிகளையும் பொறுத்த நேர்வில், 1994—ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் எனவும்; பொருள்படும். தமிழ்நாடு சட்டம் 21/1994.

(*k*) அதிகாரமற்ற மேம்பாடு என்றால்,—

(i) திட்ட அனுமதி அல்லது கட்டட அனுமதி எதிலிருந்தும் மீறிய வகையில்; அல்லது

(ii) திட்ட அனுமதி அல்லது கட்டட அனுமதி எதையும் பெறாமல்; அல்லது

(iii) பெரும் திட்டத்தின்படி அல்லது ஏற்பளிக்கப்பட்ட விரிவான வளர்ச்சித் திட்டத்தின்படி வகைப்படுத்தப்பட்ட நிலப் பயன்பாட்டிற்கு மீறிய வகையில்; அல்லது

(iv) சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்கான மேம்பாடுக் கட்டுப்பாட்டு விதிகளை மீறிய வகையிலும் சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்குள்ளாக இருக்கின்ற பரப்பிடங்களுக்குப் பொருந்தக்கூடிய கட்டட விதிகள், ஒழுங்குமுறை விதிகள், துணைமுறை விதிகள் ஆகியவற்றை மீறிய வகையிலும் பயன்படுத்தப்பட்ட நிலம் எதுவுமோ அல்லது கட்டடம் எதுவுமோ அல்லது மேற்கொள்ளப்படும் கட்டடம் எதனையும் கட்டுவது எனப்பொருள்படும்;

மற்றும் அது பொதுத் தெருக்களிலுள்ள கூவி விற்பவர்களாலும் அத்தெருக்களில் விற்பனை செய்பவர்களாலும் மற்றும் குடிசைப் பகுதிகளில் உள்ள மக்களாலும் செய்யப்படும் அதிகாரமற்ற கையுடைமையையும் உள்ளடக்கும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972.
தமிழ்நாடு சட்டம் IV/1919.
தமிழ்நாடு சட்டம் V/1920.
தமிழ்நாடு சட்டம் 21/1994.

(2) இதில் பயன்படுத்தப்பட்டுள்ள, ஆனால் பொருள் வரையறை செய்யப்படாத சொற்களும், சொற்றொடர்களும் அவற்றுக்கு முறையே 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டத்திலும், 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திலும், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திலும், 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலும் குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களையே கொண்டிருக்கும்.

நெறிமுறைகள், கொள்கை வழிகாட்டு நெறிமுறைகள் முதலானவற்றை அரசு முடிவு செய்தல்.

**3.** (1) தொடர்பான சட்டம் எதிலுமோ அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள், ஒழுங்குமுறை விதிகள் அல்லது துணைமுறை விதிகள் எவற்றிலுமோ என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசானது இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து ஓராண்டுக் கால அளவிற்குள்ளாக, சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தின் மேம்பாடுகள் தொடர்ந்து திட்டமிட்டமுறையில் நடைபெறும் வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு அதிகாரமற்ற மேம்பாடுகளினால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக நெறிமுறைகள், கொள்கை வழிகாட்டு நெறிமுறைகள் இயலக்கூடிய ஆயத்தவியூக ஏற்பாடுகள் ஆகியவற்றை முடிவு செய்வதற்குச் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து இயலக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். அதாவது.—

(*a*) பெரும் திட்டம், விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள் அல்லது திட்ட அனுமதி எதற்கும் இணங்கிய வகையில் அல்லாது பயன்படுத்தப்படும் நிலம்;

(*b*) திட்ட அனுமதியை அல்லது கட்டட அனுமதியை மீறிய வகையில் அல்லது அதன் எல்லைகளுக்கு அப்பால் செய்யப்படும் கட்டுமானம்;

(*c*) திட்ட அனுமதி அல்லது கட்டட அனுமதி இல்லாமல் செய்யப்படும் மேம்பாடு;

(d) பொதுத் தெருக்களில் கூவி விற்பவர்கள், சாலை வணிகர்கள், குடிசைப் பகுதியில் உள்ள மக்கள் ஆகியோரால் செய்யப்படும் அதிகாரமற்ற கையுடைமை;

(2). (1)–ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு, மற்றும் நீதிமன்றம் எதனின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று இருந்தவாறான நிலை, (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரமற்ற மேம்பாட்டு வகைகளைப் பொறுத்த அளவில் பேணி வரப்படுதல் வேண்டும்.

(3) 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாளுக்கு முன்னதாக (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரமற்ற மேம்பாட்டு வகைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தொடங்குவதற்கு, தொடர்பான சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது அதிகார அமைப்பு எதனாலும் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் மேற்சொன்ன ஓராண்டு கால அளவின்போது தண்டனை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் கூடாது.

(4) இந்த சட்டத்தில் அடங்கியுள்ள பிற வகைமுறை எதுவும் என்னவாக இருந்தபோதிலும் அரசானது எந்த நேரத்திலும் அந்த ஓராண்டு முடிவடைவதற்கு முன்பாக (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரமற்ற மேம்பாட்டு வகைப்பாடுகளைப் பொறுத்த அளவில் *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் அறிக்கையின் மூலமான (2)–ஆம் உட்பிரிவிலோ அல்லது நேர்விற்கேற்ப (3)–ஆம் உட்பிரிவிலோ கொடுக்கப்பட்ட சலுகையை மீளப் பெறலாம்.

இந்த சட்டத்தின் வகைமுறைகள் ஒரு சில நேர்வுகளில் பொருந்தாது எனல்.

**4.** இந்தச் சட்டத்தின் செயற்பாட்டுக் கால அளவின்போது பின்வரும் அதிகாரமற்ற மேம்பாடு வகைப்பாடுகளைப் பொறுத்த அளவில் 3–ஆம் பிரிவின்கீழ் தீர்வழி எதுவும் வழங்கப்படுதல் கூடாது.—

(*a*) 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாளன்றோ அல்லது அதற்கு பின்னரோ தொடங்கப்பட்ட அல்லது தொடரப்பட்ட அதிகாரமற்ற மேம்பாடு எதுவும்;

(*b*) பெரும் திட்டம் அல்லது விரிவான மேம்பாட்டுத் திட்டத்தின் வகைமுறைகளை மீறிய வகையில் அல்லது 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாளன்றோ அல்லது அதற்கு பின்னரோ சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தில் எவ்விடத்திலும் செயற்பாடு எதனையும் தொடங்குதல்;

(*c*) 3–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் (d) கூறின்கீழ் வரும் அத்தகைய நேர்வுகள் நீங்கலாக, பொதுத் தெருக்களில் செய்யப்படும் அதிகாரமற்ற கையுடைமை மற்றும்

(d) பொதுத் திட்டம் எதற்காகவும் தேவைப்படும் நிலத்தைப் பெறுவதற்காக அரசின் கொள்கைகளுக்கு இணங்கிய வகையில் குடிசைப் பகுதி மக்களை, கூவி விற்பவர்களை மற்றும் தெருக்களில் விற்பனை செய்பவர்களை அகற்றுதல்.

இந்த சட்டம் பிற சட்டங்களுக்கு மேலோங்கி நிற்றல்.

**5.** இந்த சட்டத்தின் வகைமுறைகள் அப்போதைக்கு நடைமுறையில் உள்ள இம்மாநிலச் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட பிற சட்டம் எதிலும் அதற்கு முரணாக என்ன அடங்கியிருந்தபோதிலும் செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும்.

பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம்.

**6.** அரசானது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக, தொடர்பான சட்டம் எதனின் கீழும் அமைந்த உள்ளாட்சி அதிகார அமைப்பு எதற்குமோ அல்லது பிற அதிகார அமைப்பு எதற்குமோ தாம் தக்கதெனக் கருதக்கூடிய அத்தகைய பணிப்புரைகளை அவ்வப்போது பிறப்பிக்கலாம், மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பது அத்தகைய உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது பிற அதிகார அமைப்பின் கடமையாக இருத்தல் வேண்டும்.

நீக்கமும் காப்பும்.

**7.** (1) 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2010.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ அல்லது கொடுக்கப்பட்ட பணிப்பாணை எதுவுமோ, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ, எடுக்கப்பட்டுள்ளதாகவோ அல்லது கொடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010—ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 46/2010.**

***1971 —ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து—ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச்சட்டம் 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972. (2) இஃது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்

2. 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் 47—ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:— 47—A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

47—A. *திட்டப்பரப்பிடம் அல்லாத பிற பரப்பிடம் ஒன்றில் நிலத்தை மேம்படுத்துதல்.*—(1) திட்டப்பரப்பிடம் அல்லாத பிற பரப்பிடம் ஒன்றில் உள்ள நிலம் எதிலும் மேம்பாடு எதனையும் நிறைவேற்றுவதற்கு கருதுகிற நபர் எவரும், உள்ளாட்சி அதிகார அமைப்பிற்கு, அனுமதிக்காக, வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய விவரங்களுடன் அத்தகைய ஆவணங்களுடன் இணைத்து எழுத்து மூலமாக விண்ணப்பமொன்று செய்தல் வேண்டும்.

(2) உள்ளாட்சி அதிகார அமைப்பு (1)—ஆம் உட்பிரிவின் படியான அனுமதி வழங்குவதற்கு முன்பு, இயக்குநரிடம் முன் ஒருங்கிசைவு பெறுதல் வேண்டும்; மற்றும் அதோடுகூட வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய கட்டணங்களை அத்தகைய வீதத்தில் வசூலித்தல் வேண்டும்:

*வரம்புரை:* ஆனால், நன்செய் நிலங்களாக இருக்கும் நேர்வில், தொடர்புள்ள மாவட்ட ஆட்சியரின் முன் ஒருங்கிசைவானது தேவையானதாகும்.

(3) மாவட்ட ஆட்சியர் வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வழிகாட்டு முறைகளை நிறைவேற்றுவதன்பேரில் (2)—ஆம் உட்பிரிவின்படி உள்ளாட்சி அதிகார அமைப்பிற்கு அவரின் முன் ஒருங்கிசைவை வழங்குதல் வேண்டும்.

(4) நில மேம்பாடு எதுவும்.—

*(a)* இந்தப் பிரிவின்படி கோரப்பட்ட அனுமதியின்றி; அல்லது

*(b)* வழங்கப்பட்ட அனுமதி எதனையும் அல்லது எந்த நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டதோ அந்த நிபந்தனை எதனையும் மீறிய நிலையில்; அல்லது

*(c)* நிலமேம்பாட்டிற்கான அனுமதியானது, உரியவாறு நீக்கம் செய்யப்பட்ட பின்பு; அல்லது

*(d)* உரியவாறு மாற்றம் செய்யப்பட்ட அனுமதி எதனையும் மீறிய வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளவிடத்து,

உள்ளாட்சி அதிகார அமைப்பு, தேவைப்படக்கூடிய அத்தகைய மாற்றங்களுடன் **56** மற்றும் **57**–ஆம் பிரிவுகளின்படி உரிய திட்ட அதிகார அமைப்பின் அதிகாரங்களைச் செலுத்துதல் வேண்டும்.

*விளக்கம்.*– இந்தப் பிரிவில் ''நன்செய் நிலம்'' என்ற சொற்றொடர், **1963**–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிக்கணிப்பு மற்றும் கூடுதல் நீர் மேல்வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **8/1963**) அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.